www.Padasalai.Net

**அனுப்புநர்**
திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006,

**பெறுநர்**
அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்.

**ந.க.எண்: 005124 /டி(1)/2024** **நாள்: 04.06.2024**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்:** தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு, ஜூலை 2024 – தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயின்று 2024–2025 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணக்கர்கள் – விண்ணப்பித்தல் – அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தேர்வு தொடர்பான அறிவுரைகள் வழங்கிடக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக செய்தி குறிப்பு நாள். 04.06.2024

*****

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளி மாணவ மாணவியர்களின் திறனைக் கண்டறிவதற்கும், அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், 2024– 2025 ஆம் கல்வியாண்டிற்கான "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு" 21.07.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

"தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்விற்கு" விண்ணப்பிக்க விரும்பும் தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயின்று தற்போது 2024–2025 ஆம் கல்வியாண்டில் பதினொன்றாம் வகுப்பினை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பப் படிவத்தினை 11.06.2024 முதல் 26.06.2024 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து தேர்வு கட்டணம் ரூ.50/– (ரூபாய் ஐம்பது மட்டும்) சேர்த்து 26.06.2024–ற்குள் மாணவர் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

2..

www.Padasalai.Net



எனவே, தங்கள் **அதிகார எல்லைக்குட்பட்ட அ**னைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர் இத்தேர்விற்கு விண்ணப்பித்திட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உரிய அறிவுரைகள் வழங்கிடவும், தேர்வு தொடர்பான அறிவிப்பினை மாணவர்கள் அறியும் வண்ணம் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளின் அறிவிப்புப் பலகையில் ஒட்டவும், அதிக எண்ணிக்கையிலான மாணாக்கர்கள் விண்ணப்பித்திட ஊக்குவித்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஓம்/-**
**இயக்குநர்**

**இணைப்பு:** அறிவிப்பு

**நகல்**

1. உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு மாதிரிப்பள்ளிகள், சென்னை-6 தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் - தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

www.Padasalai.Net

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6.**

**தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு (TNCMTSE) – ஜூலை 2024**

**செய்திக் குறிப்பு**

2024 – 2025 ஆம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு, 21.07.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயின்று தற்போது 2024-2025 ஆம் கல்வியாண்டில் பதினொன்றாம் வகுப்பினை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். இத்தேர்வில் 1000 மாணாக்கர்கள் (நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டின் அடிப்படையில் 500 மாணவர்கள் + 500 மாணவியர்கள்) தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவித்தொகையாக ஒரு கல்வியாண்டிற்கு ரூபாய் 10,000/-(மாதம் ரூ.1000/- வீதம் ஒரு கல்வியாண்டிற்கு 10 மாதங்களுக்கு மட்டும் ) இளநிலை பட்டப்படிப்பு வரை வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசின் 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளில் கணிதம், அறிவியல் மற்றும் சமூகஅறிவியல் பாடப் புத்தகத்தில் உள்ள பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறிவகையில் தேர்வு இருதாள்களாக நடத்தப்பெறும். முதல் தாளில் கணிதம் தொடர்புடைய வினாக்கள் 60 இடம்பெறும். இரண்டாம் தாளில் அறிவியல் மற்றும் சமூகஅறிவியல் தொடர்புடைய வினாக்கள் 60 இடம்பெறும். முதல் தாள் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் இரண்டாம் தாள் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரையிலும் நடைபெறும். மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பப் படிவத்தினை 11.06.2024 முதல் 26.06.2024 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தேர்வு கட்டணம் ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) சேர்த்து 26.06.2024-ற்குள் மாணவர் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**ஒம்/-**
**இயக்குநர்**

இடம்: சென்னை
நாள்: 04.06.2024